கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No. 157/2023 நாள்: 17.07.2026

வா.சா.2 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா – 2 தவமணி முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால் இல்லை. வாதியின் வழக்கறிஞர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கொடுத்த பணத்தை திரும்ப வசூலலிக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, குண்டுப்பட்டியில் ஆசிரியராக வேலைப்பார்க்கிறேன். இந்த பள்ளியில் 5 வருடமாக வேலை பார்த்து வருகிறேன்.

1 ஆம் பிரதிவாதியின் சங்கத்தில் நான் எத்தனை வருடமாக அடிப்படை உறுப்பினராக இருந்து வருகிறேன் என்றால் 2018 ஆம் வருடத்திலிருந்து உறுப்பினராக உள்ளேன். அதற்கான அடையாள அட்டையை நிருபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கொண்டு வந்துள்ளேன். நான் ஆசிரியராக வேலை பார்க்கிறேன் என்பதற்காக அடையாள அட்டையை நிருபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 ஆம் பிரபதிவாதியின் சங்கத்தில் ஒவ்வொரு வருடமும் சந்தாவை

செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். அதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

1ஆம் பிரதிவாதியின் சங்கத்தின் விதிகள் எனக்கு நன்கு தெரியும். 1ஆம் பிரதிவாதியின் சங்கத்தில் கொடுக்கல் வாங்கல் நிலம் வாங்குதல் குறித்து தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் மகா சபையை கூட்டி தலைவர், பொருளாளர் ஆகிய இரண்டு பேர் சேர்ந்து வங்கி வரவு செலவு, சங்கத்தில் நிலம் வாங்குவது தொடர்பாக இரண்டு பேர் மட்டும் கையொப்பம் செய்து பணம் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டும் என்றால் விதிகளில் அவ்வாறு தான் உள்ளது. 1ஆம் பிரதிவாதியின் சங்கம் 2018 ஆம் வருடத்தில் பதிவு செய்யும் போது என்னுடைய பெயர் அந்த சங்கத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தற்போது வரை என்னிடம் காட்டப்படும் 1ஆம் பிரதிவாதியின் சங்கம் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்படி நான் அடிப்படை உறுப்பினர் கிடையாது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் வாதிக்கும் எனக்கும் என்ன தொடர்பு என்று சொல்லியுள்ளேனா என்றால் நான் திண்டுக்கல் மாவட்ட செயலாளர் என்ற முறையில் எனக்கும் வாதிக்கும் தொடர்பு உள்ளது. என்னிடம் காட்டப்படும் 1ஆம் பிரதிவாதியின் சங்கம் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்படி வாதி அடிப்படை உறுப்பினர் கிடையாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 2020 ஆம் வருட அறிக்கையில் மாவட்ட பதிவாளரிடம் சமர்ப்பித்த 1ஆம் பிரபதிவாதியின் சங்கம் குறித்த பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி வாதியின் பெயர் இல்லை என்றால் சரிதான். 2018 ஆம் வருடம் முதல் தற்போது வரை உறுப்பினர்கள் புதுப்பிக்கப்படவில்லை. அதனால் என் பெயரும் வாதியின் பெயரும் எந்த ஒரு உறுப்பினர் பெயரும் அதில் இல்லை. இது சம்பந்தமாக மாவட்ட பதிவாளரிடம் புகார் கொடுத்துள்ளோம். புகார் கொடுத்தது சம்பந்தமாக ஆவணம்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 13.03.2020 ஆம் தேதி 1 ஆம் பிரதிவாதியிடம் பணம் வாங்கியதாக சொல்லியுள்ளதில் அன்றைய தினம் வேலை நாள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 2 ஆம் பிரதிவாதி எப்படி தொடர்ப்பு கொண்டு என்னை பணம் வாங்க அழைத்தார் என்றால் போன் மூலம் தொடர்பு கொண்டு அழைத்தார். 2 ஆம் பிரதிவாதி போன் மூலம் அழைத்த தினமே நான் போய் விட்டேன் என்றால் நான் 2 வது சாட்சியை அழைத்து கொண்டு என்னுடைய காரில் அன்றைய தினமே மதுரைக்கு போனேன்.

பணம் வாங்கும் போது சுமார் எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 3 அல்லது 4 மணி இருக்கும். வா.சா.ஆ.1 கடன் ஒப்பந்தம் முழுவதையும் பிரதிவாதி ராமச்சந்திரன் சொல்ல சொல்ல நான் தான் எழுதினேன். வா.சா.ஆ. 1 கடன் ஒப்பந்தத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய கையொப்பத்திற்கு மேல் எழுதியதும் சாட்சியுமான என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 கடன் ஒப்பந்த ஆவணத்தில் தேதி 13 என்பதற்ற அடுத்து மாதம் வருடம் எழுதப்பட்டுள்ள எண்களில் அடித்தல் திருத்தல் உள்ளதா என்றால் இல்லை. 10 லட்சம் ரூபாயை 500 ரூபாய் தாள்களாக 20 கட்டுகள் கொடுத்தார். வாதி முதல் விசாரணைக்கு மட்டும் ஆஜரானார் என்றும் குறுக்கு விசாரணைக்கு ஆஜர் ஆகவில்லை என்ற விவரம் தெரியமா என்றால் தெரியாது. 1 ஆம் பிரதிவாதியின் சங்கத்திற்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும் என்னையும் வாதியையும் யார் என்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதியின் சங்கம் சார்பாகவோ தனிப்பட்ட முறையிலோ வாதியிடம் இருந்து எந்த ஒரு தொகையும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.வா.சா.ஆ. 1 கடன் ஒப்பந்தத்தில் 2 ஆம் பிரதிவாதியின் கையொப்பத்தை நானும் வாதியும் சேர்ந்து மோசடியாக தயார் செய்து ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி 2 ஆம் பிரதிவாதிக்கு

உண்மையாக பணம் கொடுத்து இருந்தால் குறுக்கு விசாரணைக்கு ஆஜர் ஆகி இருப்பார் என்றும் பணம் எதுவும் கொடுக்காமல் மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்யதுள்ளதால் குறுக்கு விசாரணைக்கு வாதி ஆஜர் ஆகவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி வாதி எந்த பணமும் வாங்கவில்லை என்றும் கொடுக்கல்வாங்கல் எதுவும் கிடையாது என்றும் இந்த வழக்கை மோசடியாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளதால் 2 ஆம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2026.07.17 17:27:43 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.